Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை | 232 | உள்ளூர் - 20.08.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue | 232 | வெளியூர் - 21.08.2026 | வெள்ளிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**ரக்ஷா பந்தன்: ராசிக்கேற்ற பரிசுகள்!**

**மத்திய அரசில் 62 காலியிடங்கள்!**

**மணிப்பூரில் மீண்டும் பதற்றம்!**

**இலங்கை அகதிகள் தாயகம் திரும்ப சிறப்பு ஏற்பாடு!**

# ஈரானுக்கு முதல் வெற்றியா?

ஈரான், ஆக. 20–



ஈரான் போரில் அமெரிக்கா இழப்புகளை சந்தித்து வரும் நிலையில், வளைகுடா நாடுகளில் உள்ள 20 ராணுவத் தளங்களில் பணியாற்றும் சுமார் 40,000 அமெரிக்க வீரர்களை குறைக்கவும், சில தளங்களை காலி செய்யவும் அமெரிக்கா திட்டமிட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஈரானின் ட்ரோன் தாக்குதல்களால் குவைத் உள்ளிட்ட அமெரிக்க ராணுவத் தளங்களில் போர் விமானங்கள், எரிபொருள் கிடங்குகள் மற்றும் ராணுவக் கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இத்தனை பெரிய படை மற்றும் கட்டமைப்பு வளைகுடாவில் தேவையா என பென்டகன் மறுபரிசீலனை செய்து வருகிறது; வீரர்களை பாதியாகக் குறைக்கும் வாய்ப்பும் உள்ளது.

ஈரான் நீண்டகாலமாக வளைகுடா நாடுகளில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும் என வலியுறுத்தி வருகிறது. ஈராக் நாட்டிலிருந்து செப்டம்பர் 30–க்குள் வெளியேறவும் அமெரிக்கா ஏற்கனவே திட்டமிட்டுள்ளது.


இந்தப் போரில் இதுவரை 18 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்து, நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். ஆயுதம் மற்றும் நிதி அழுத்தங்களும் அமெரிக்காவை பாதிக்கின்றன.

அமெரிக்கப் படைகள் வெளியேறினால் ஈரானுக்கு பேச்சுவார்த்தையில் கூடுதல் பலம் கிடைக்கலாம்; வளைகுடாவில் ஈரான் ஆதிக்கம் அதிகரிக்கும் என்ற அச்சமும் உள்ளது. அதேநேரம், இந்த அச்சத்தை பயன்படுத்தி வளைகுடா நாடுகளிடம் அமெரிக்கா தனது செல்வாக்கை தொடர முயற்சிக்கலாம். பாதிக்கப்பட்ட அமெரிக்கத் தளங்களை சீரமைக்க GCC நாடுகள் உதவி செய்து படைகளை தக்கவைக்க வாய்ப்பும் உள்ளது.

தற்போதைய சூழலில், ஈரானுடன் பேச்சுவார்த்தை மூலம் பதற்றத்தை கட்டுப்படுத்தும் முயற்சியும் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# “கலிபோர்னியா இனி ஈரானின் பகுதி!” டிரம்புக்கு ஈரான் அதிரடி பதிலடி!

வாஷிங்டன், ஆக. 20–




அமெரிக்கா ஈரான் இடையே நேரடி போர் தாக்குதல் இல்லாவிட்டாலும், பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.கடந்த 2 வாரங்களாக ஹார்முஸ் நீரிணையை முழுமையாக கைப்பற்றுவது குறித்து பேசி வரும் அமெரிக்க அதிபர் டிரம்ப், தனது ‘Truth Social’ பக்கத்தில் ஹார்முஸ் நீரிணையை அமெரிக்காவின் புதிய பகுதியாக அறிவிப்பது போன்ற புகைப்படத்தை வெளியிட்டார்.

இதற்கு பதிலடியாக, ஹைதராபாத்தில் உள்ள ஈரான் தூதரகத்தின் சமூக வலைதளப் பக்கம், கலிபோர்னியாவை இஸ்லாமிய குடியரசான ஈரானின் புதிய பகுதியாக அறிவிப்பது போன்ற புகைப்படத்தை வெளியிட்டது. இந்தப் பதிவு 24 மணி நேரத்தில் 1 லட்சத்துக்கும் அதிகமான பார்வைகளை பெற்றது. டிரம்ப் ஏற்கனவே கிரீன்லாந்து, வெனிசுலா உள்ளிட்ட பகுதிகள் தொடர்பாக இதுபோன்ற பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், தற்போது ஹார்முஸ் விவகாரமும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையில், அமெரிக்க வீரர்களை கொன்றாலோ அல்லது பிணைக் கைதிகளாக பிடித்து ராணுவத்திடம் ஒப்படைத்தாலோ ரூ.5 பில்லியன் ஈரான் தோமான் பரிசு வழங்கப்படும் என ஈரான் ராணுவத் தலைவர் அமீர் ஹடாமி அறிவித்ததாக செய்தி தெரிவிக்கிறது. பெண் வீரர்களை கொன்றால் பரிசுத்தொகை இரட்டிப்பாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், இதுவரை அமெரிக்க ராணுவம் ஈரான் நாட்டிற்குள் தரைவழியாக நுழைந்து தாக்குதல் நடத்த முயற்சி மேற்கொள்ளவில்லை. இரு தரப்பினரும் வெளியிட்ட இந்த அறிவிப்புகள், நேரடி போரை விட பதிலடி அரசியல் மற்றும் உளவியல் போரின் தீவிரத்தை வெளிப்படுத்துகின்றன.

# 3 துறை கோப்புகளை நேரம் வரும்போது திறப்பேன்: முதல்வர் விஜய் எச்சரிக்கை!

சென்னை. ஆக. 20–



‘தவறு நடந்ததற்கான ஆதாரங்களுடன் என் மேஜையில் 3 துறைகளின் கோப்புகள் உள்ளன. அதை திறக்க வேண்டிய நேரத்தில் திறப்பேன்’ என்று சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் நேற்று, நீர்வளம், ஊரக வளர்ச்சி மற்றும் சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தை, ஆத்தூர் தொகுதி திமுக உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஐ.பெரியசாமி தொடங்கி வைத்தார். அப்போது, வீடு கட்டும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்குவது குறித்து கேள்வி எழுப்பினார். அப்போது பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் என். ஆனந்த், திமுக ஆட்சியில் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் வீடு இருப்பவர்களுக்கும் மீண்டும் வீடு வழங்கப்பட்டதாக தெரிவித்தார். அப்போது, ஐ.பெரியசாமி, தவறுகள் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

அமைச்சர் ராஜ்மோகன்: என்ன பேசினாலும் ஆதாரம் காட்டுங்கள் என்று எதிர்க்கட்சிகள் கேட்கின்றனர். அமைச்சர்கள் பேசும்போது, தவறு நடந்திருக்கலாம் என்று ஒப்புக்கொள்கின்றனர். ஆதாரங்களை நாங்கள் காட்டும்போதே இப்படி பேசுகின்றனர்.

முதல்வர் ஆதாரங்களை வைத்திருக்கிறார். ஒருவேளை அவர் எடுத்துக் காட்டினால்... எதிர்க்கட்சியினர் நிலைமை கொஞ்சம் கவலையாகத்தான் இருக்கிறது.

முதல்வர் விஜய்: நான் எதுவும் சொல்ல வேண்டாம் என்று தான் நினைத்தேன். ஆதாரம், ஆதாரம் என்று கேட்கின்றனர். ஒரு வாரத்துக்கு முன்பாக, நிதியமைச்சர் பேசும்போது, 3 துறைகளை ஆய்வுசெய்து அது தொடர்பான கோப்புகள் என் மேஜையில் இருப்பதாகக் கூறினார். அவர் ஏதோ போகிற போக்கில் அதை கூறவில்லை.

உண்மையிலேயே எனது மேஜையில் உள்ளன. அத்தனையும் ப்ரூப் உடன் இருக்கிறது. ஓபன் பண்ண வச்சுராதீங்க. எதை எப்போ ஓபன் பண்ணனுமோ, அப்போ எல்லாமே கரெக்டா ஓபன் ஆகும்.

அமைச்சர் ரமேஷ்: அண்ணன்கள் எல்லோரும், பேசுங்கள் என்கின்றனர். முதல்வர் பேச ஆரம்பித்தார் என்றால், ஆதாரங்களைக் காட்ட ஆரம்பித்தார் என்றால் என்ன நடக்கும் என்பதை இதில் இருந்தே தெரிந்து கொள்ளலாம். (அப்போது திமுக உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.)

முதல்வர் விஜய்: மக்கள்கிட்ட எப்போ பேசணும், என்ன பேசணும், எப்படி பேசணும்னு எல்லாம் பேசிட்டுதான், அன்பா, ஆசையா எங்கள் எல்லோரையும் கொண்டுவந்து இங்கு உட்கார வைத்துள்ளார்கள். நான் பேசுவேன். பேசக்கூடாது என்பதில்லை. இடைத்தேர்தல்லயாவது சிலபேருக்கு நல்லது நடக்கணும்.

ஐ.பெரியசாமி: நான் அன்பா ஆசையா பேசித்தான், 9 முறை வெற்றி பெற்றுள்ளேன். ஒரே தொகுதியில் 7 முறை வெற்றி பெற்றுள்ளேன்.

இரண்டு முறை தமிழகத்தில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளேன். அந்த அங்கீகாரத்தை மக்கள் வழங்கியுள்ளனர். இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# உலக உணவு சந்தையில் புதிய ஆட்டம்!

# மேற்கத்திய ஆதிக்கத்துக்கு பிரிக்ஸ் ‘செக்’! புதினின் மெகா பிளான்!

## டெல்லியில் முடிவு– இந்தியாவுக்கு முக்கிய பங்கு!!

புதுடெல்லி, ஆக. 20–



உலகின் அடுத்த பெரிய சக்தியாக பிரிக்ஸ் நாடுகள் உருவெடுக்கும் நிலையில், விவசாயப் பொருட்களின் உலகளாவிய வர்த்தகம் மற்றும் விலை நிர்ணயத்தில் ஆதிக்கம் செலுத்த புதிய ‘Grain Exchange’ தளத்தை உருவாக்க ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் திட்டம் முன்வைத்துள்ளார்.

உலக விவசாயம் மற்றும் உணவு உற்பத்தியில் பிரிக்ஸ் நாடுகள் சுமார் 42% பங்களிப்பைக் கொண்டுள்ளன. கச்சா எண்ணெய் உற்பத்தி நாடுகள் OPEC, OPEC+ அமைப்புகள் மூலம் எண்ணெய் விலை மற்றும் விநியோகத்தில் செல்வாக்கு செலுத்துவது போல, விவசாயப் பொருட்கள் சந்தையிலும் பிரிக்ஸ் நாடுகள் ஆதிக்கம் செலுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம். Grain Exchange மூலம் பிரிக்ஸ் நாடுகள் உற்பத்தி செய்யும் கோதுமை, சோளம் உள்ளிட்ட உணவு தானியங்கள் மற்றும் விவசாயப் பொருட்களை ஒருங்கிணைந்து வர்த்தகம் செய்ய முடியும். தற்போது அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட சில நாடுகள் விவசாயப் பொருட்களின் சர்வதேச விலை நிர்ணயத்தில் அதிக ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில், அந்த ஆதிக்கத்தை குறைத்து பிரிக்ஸ் நாடுகளின் சொந்த விலை நிர்ணய சக்தியை உருவாக்குவதுதிட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

புதின் இந்த யோசனையை முதன்முதலில் 2024–ல் அறிவித்தார். சமீபத்தில் ஜெய்ப்பூரில் நடைபெற்ற கூட்டத்திலும் இத்திட்டம் முன்வைக்கப்பட்டது. இதன் அடுத்தகட்டமாக செப்டம்பர் 1213 தேதிகளில் டெல்லியில் நடைபெறும் பிரிக்ஸ் கூட்டத்தில், பிரிக்ஸ் நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் இத்திட்டம் குறித்து முக்கிய முடிவு எடுக்க உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிக்ஸ் அமைப்பில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகியவை முக்கிய உறுப்பினர்களாக உள்ளன. எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளும் தற்போது இதில் இடம்பெற்றுள்ளன.

# விஜய்யை சமாளிக்க திமுக-பாஜக புதிய கணக்கு!

புதுடெல்லி, ஆக. 20–



பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையில் விரைவில் 20–க்கும் மேற்பட்ட அமைச்சர்களின் இலாகாக்கள் மாற்றப்படலாம் என்ற தகவல் டெல்லி அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சில அமைச்சர்களின் பணிச்சுமை குறைக்கப்படவும், சிலருக்கு புதிய அல்லது கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படவும், சிலர் அமைச்சரவையிலிருந்து விடுவிக்கப்பட்டு மீண்டும் கட்சிப் பணிக்கு அனுப்பப்படவும் வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

இந்த மாற்றங்களுடன் திமுகவும் மத்திய அமைச்சரவையில் புதிதாக இடம்பெறலாம் என்ற எதிர்பார்ப்பும் அரசியல் வட்டாரங்களில் உருவாகியுள்ளது. தமிழகத்தில் விஜய் தலைமையிலான தவெக ஆட்சி அமைந்த பிறகு திமுகவின் அரசியல் அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. குறிப்பாக, தொகுதி மறுவரையறை மசோதாவை கடுமையாக எதிர்த்த திமுக, தற்போது சில நிபந்தனைகளுடன் ஆதரவு அளிக்கத் தயாரானது கவனம் பெற்றுள்ளது.

மேலும், டெல்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் திமுக எம்.பி. கனிமொழி கருணாநிதி பங்கேற்றதும் அரசியல் முக்கியத்துவம் பெற்றது. மாநிலங்களவை திமுக எம்.பி. கனிமொழி சோமு, “அரசியலில் நிரந்தர எதிரிகள் இல்லை” என தெரிவித்திருந்ததும் இந்த விவாதத்துக்கு கூடுதல் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதன் தொடர்ச்சியாக திமுகபாஜக நெருக்கம் குறித்து சமூக வலைதளங்களிலும் பல்வேறு செய்திகள், விமர்சனங்கள் வெளியாகின. இதுகுறித்து மக்களவை எம்.பி. கனிமொழியிடம் கேட்கப்பட்டபோது, பாஜகவுடன் எந்தக் கூட்டணியும் இல்லை என அவர் தெரிவித்திருந்தார். இருந்தபோதிலும், திமுகபாஜக உறவு குறித்த அரசியல் பேச்சுகள் தொடர்ந்து வருகின்றன.

தற்போது வடமாநில நாளேடுகளிலும் இதுதொடர்பான செய்திகள் வெளியாகத் தொடங்கியுள்ளன. குறிப்பாக, மோடி மேற்கொள்ள உள்ள பெரிய அளவிலான அமைச்சரவை மாற்றத்தில் திமுகவும் இடம்பெறலாம் என செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து திமுக எம்.பி.க்கள் வட்டாரம் கூறுகையில், காங்கிரஸுடனான உறவு முறிந்துள்ள நிலையில், திமுகவுக்கு ஒரு தேசியக் கட்சியின் நட்பு அவசியமாகியுள்ளது என்றும், தமிழகத்தில் ஆளும் தவெகவை எதிர்கொள்ள இது உதவும் என்றும் தெரிவித்ததாக கூறப்படுகிறது. அதேநேரத்தில், பாஜகவுடன் நட்பு ஏற்படுத்தும் முயற்சி இருந்தாலும், மத்திய அமைச்சரவையில் திமுக இணையும் என்பது உறுதி இல்லை; இறுதி முடிவை கட்சித் தலைமைதான் எடுக்கும்என்றும் அந்த வட்டாரம் தெரிவித்துள்ளது.

இதனால், மோடி அமைச்சரவையின் 20–க்கும் மேற்பட்ட இலாகா மாற்றம், அதில் திமுகவுக்கு இடமிருக்குமா, தமிழக அரசியலில் தவெகவை எதிர்கொள்ள திமுக புதிய தேசிய அரசியல் நகர்வை மேற்கொள்கிறதா? என்ற கேள்விகள் டெல்லி முதல் சென்னை வரை அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 20.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 03-ம் தேதி

# இந்திய ரியல் எஸ்டேட் துறையில் புது மாற்றம்..!



பணக்காரர்கள் மத்தியில் பொதுவாக இருக்கும் குணம், மற்றவர்களை காட்டிலும் தனித்துவமாக இருக்க வேண்டும் என்பது தான். இதனால் செல்லக்கூடிய ஹோட்டல், பயன்படுத்தும் கார் முதல் தங்கம் வீடு, முதலீடு வரையில் தனித்துவமாகவே இருக்கும். இதன் அடிப்படையில் இந்திய ரியல் எஸ்டேட் துறையில் பணக்காரர்களின் விருப்பத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டு உள்ளது.

முதலில் பெரும் பணக்காரர்கள் வாங்கும் வீடுகளை பார்த்தால் வில்லா, ஆடம்பர அப்பார்ட்மென்ட் என்ற வகையில் இருக்கும், ஆனால் தற்போது வித்தியாசமான ரியல் எஸ்டேட் முதலீடுகளை செய்ய துவங்கியுள்ளனர்.

அதுதான் ஹாலிடே ஹோம்.அதாவது விடுமுறை நாட்களில் பயன்படுத்தவும், கொண்டாடவும், மலை பிரதேசத்தில் ஆடம்பர வீடுகளை வாங்குவது அதிகரித்துள்ளது. இதனால் மலை பிரதேசத்தில் சாதாரண வீடுகள் கூட தற்போது அதிக விலைக்கு விற்க துவங்கியுள்ளது.

தற்போது பெரும் பணக்காரர்கள் ஹிமாச்சல பிரதேசம், உத்தரக்கண்ட் போன்ற மலை பகுதியில் சர்வ சாதாரணமாக 20 கோடிக்கும் அதிக மதிப்புடைய வீடுகள் விற்பனை செய்யப்படுவது அதிகரித்துள்ளது. இத்தகைய இடத்தில் அதிகம் வாங்குவது HNI என அழைக்கப்படும் பெரும் பெரும் பணக்காரர்கள் தான் என சந்தை ஆய்வுகள் கூறுகிறது. மெட்ரோ நகரங்களில் 100 கோடி ரூபாய் முதலீடு செய்து ஆடம்பரமான வீடு வாங்கினாலும் கிடைக்காத சில விஷயங்களை பெறுவதற்காகவே மலை பிரதேசத்தில் 20–30 கோடி போட்டு பெரும் பணக்காரர்கள் வீடு வாங்குகிறார்கள் என கூறுகிறாப் எல்டெகோவின் டெரா கிராண்டே நிறுவனத்தின் சிஇஓ மற்றும் நிறுவனரான அமர் கபூர்.

இதுப்போன்ற மலை வீடுகளை வாங்கும் போது அது அரிய சொத்தாக இருக்கும், இதேபோல் இயற்கையுடன் கூடிய தனிமையான வாழ்க்கை பெற முடியும் என்பதால் இத்தகைய வீடுகளை அதிகம் வாங்குகின்றனர்

இதை ரியல் எஸ்டேட் சந்தையில் second–home மார்கெட் என அழைப்பது வழக்கம். அதாவது ஏற்கனவே வீட்டை வைத்திருக்கும் HNI பணக்காரர்கள் 2வது வீட்டை ஹாலிடே ஹோம் ஆக வாங்குவது தான். இதற்கு முன்பு டிஎல்எப், டாடா ரியாலிட்டி போன்ற நிறுவனங்கள் மலை பிரதேசத்தில் இத்தகைய திட்டங்களை செயல்படுத்தியிருக்காலும், பெரிய அளவிலான முன்னேற்றம் இப்பிரிவில் இல்லாத காரணத்தால் மற்ற நிறுவனங்கள் இதில் நுழையவில்லை. இத்தகைய நிலையில் மீண்டும் ஹில் ஹோம் டிரெண்ட் உருவாகியிருக்கிறது. பெரு நகரங்களில் 100 கோடிக்கு வீடு வாங்கியுள்ள நபர்கள் மலை பிரதேசத்திலும் இதேபோன்ற ஆடம்பரத்துடன் வீட்டை வாங்க திட்டமிடுவோர் தான் இத்துறையில் முக்கிய கஸ்டமர் ஆவார்கள்.

# வேளாண் மானிய திட்டங்களுக்கு ஆதார் எண் கட்டாயம்: தமிழக அரசு!




சென்னை, ஆக. 20–

தமிழக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:–

வேளாண் வணிகத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மாம்பழம், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்திக்கான விலை குறைவுக்கான தொகை வழங்கும் திட்டங்களில் மானியம் மற்றும் சலுகைகளை பெறும் பயனாளிகள் தங்களது ஆதார் எண்ணை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆதார் எண் இல்லாதவர்கள், புதிய ஆதார் அட்டைக்கு விண்ணப்பித்திருக்க வேண்டும். ஆதார் எண் கிடைக்கும் வரை, ஆதார் பதிவு செய்ததற்கான ஒப்புகை சீட்டுடன், வாக்காளர் அடையாள அட்டை, ரேஷன் கார்டு, பாஸ்போர்ட், ஓட்டுனர் உரிமம். சாதி சான்றிதழ், மாற் றுத்திறனாளி சான்றிதழ் அல்லது மருத்துவ அடையாள அட்டை உள்ளிட்ட மாற்று ஆவணங் களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பித்து சலுகைகளை பெறலாம். இந்த ஆவணங்களை அதிகாரி கள் இணையதளம் மூலம் சரிபார்ப்பார்கள்.

கைரேகை, முகம் அல்லது கருவிழி பதிவு மூலம் ஆதார் சரிபார்ப்பு தோல்வியடைந்தால், செல் போன் 'ஓ.டி.பி.' அல்லது 'கியூ.ஆர். கோடு' மூலம் சரிபார்க்கப்படும். 18 வயதுக்குட்பட்ட குழந் தைகளுக்கு ஆதார் எண் இல்லை என்றாலும், பெற்றோரின் ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் சலுகைகள் மறுக்கப்பட மாட்டாது. மேலும், 18 வயதுக்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு சலுகைகள் மறுக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய, மத்திய அரசின் நேரடி மானிய பரி மாற்ற திட்டத்தின் 2017–ம் ஆண்டு வழிகாட்டுதலின்படி விதிவிலக்கு நடைமுறைகள் பின்பற்றப் படும். இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் மகளிர் திட்ட நிதியில் ரூ.125 கோடி முறைகேடு!



சென்னை, ஆக. 20–

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் 1983–ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்திற்கு மத்திய, மாநில அரசுகள் சராசரியாக ஆண்டுக்கு சுமார் ரூ.15 ஆயிரம் கோடி நிதி வழங்கி வருகிறது. தமிழகத் தில் 38 மாவட்டங்களில் 388 வட்டார அளவிலான பிளாக்குகள் மற்றும் 12,500 கிராம இயக்க அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இந்த மகளிர் மேம்பாட்டுக்கு வழங்கப்படும் நிதியானது தமிழகத்தில் 186 வட்டாரத்தில் சுமார் ரூ.125 கோடி முறை கேடு நடந்ததாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முறைகேடு குறித்து தேனி மாவட்டம் மேலச்சொக்கநாதபுரத்தை சேர்ந்த சமூக ஆர்வலர் ராமகிருஷ்ணன் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அதில் கடந்த 5 மாதங்களில் மயிலாடுதுறை, திருவாரூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், தேனி, அரியலூர், ராணிப்பேட்டை, தஞ்சாவூர், தூத்துக்குடி உள்ளிட்ட 12 மாவட்டங்களில் சுமார் 186 பிளாக்குகளை தணிக்கை செய்ததில் சுமார் ரூ.125 கோடிக்கு மேல் போலியான பட்டியல்கள் தயார் செய்து பணத்தை மோசடி செய்தது தெரியவந்தது.

அந்த பணம் பயனாளிகளுக்கு செல்ல வேண்டிய நிதி, வட்டார இயக்க மேலாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், அவர்களது உறவினர்கள் மற்றும் தனிநபர்களின் வங்கி கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. இது தவிர பல்வேறு வழிகளிலும் முறைகேடுகள் நடந்துள்ளன.

இதுவரை 186 வட்டாரங்களில் மட்டுமே தணிக்கை செய்யப் பட்ட நிலையில் ரூ.124 கோடியே 74 லட்சத்து 45 ஆயிரத்து 279 முறைகேடு நடந்துள்ளது. மீதம் உள்ள வட்டாரங்களில் தணிக்கை செய்தால் பல நூறு கோடி ரூபாய் முறைகேடு நடைபெற்றது தெரியவரும். எனவே தமிழகம் முழுவதும் எவ்வளவு முறைகேடு செய்யப்பட்டுள்ளது என்பதை அரசு வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும். இது குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தி முறைகேடு செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# போலீசார் லஞ்சம் கேட்டால் புகார் தெரிவிக்கலாம்.. செல்போன் எண்கள் வெளியீடு!



சென்னை, ஆக. 20–

போலீசார் லஞ்சம் கேட்டால் புகார் தெரிவிக்க தனிப்பிரிவை தொடங்கி டி.ஜி.பி. மகேஷ்குமார் அகர்வால் உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது:–

எனது அறிவுறுத்தலின்படி, தமிழக காவல்துறையின் அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாநகர கமிஷனரகங்களிலும் 'உள்நாட்டு விஜிலென்ஸ் குழுக்கள்' (அதாவது லஞ்சஒழிப்பு குழுக்கள்) அமைக்கப்பட்டுள்ளன. போலீஸ் அதிகாரிகள் மற்றும் போலீஸ்காரர்களுக்கு எதிரான ஊழல், முறைகேடு, அதிகார துஷ்பிரயோகம் மற்றும் பிற ஒழுங்கீனமான செயல்களை தடுப்பது, கண்காணிப்பது மற்றும் இதுதொடர்பான புகார்களை விசாரணை செய்வது இந்த குழுக்களின் முக்கிய நோக்கமாகும்.

'செல்போன், 'வாட்ஸ்அப்' எண்கள்

இதுபோன்ற புகார்களை பொதுமக்கள் எளிதில் தெரிவிக்கும் வகையில், மாவட்டம் மற்றும் மாநகரம் வாரியாக 'உள்நாட்டு விஜிலென்ஸ் குழுக்களுக்கு' செல்போன் மற்றும் 'வாட்ஸ்அப்' எண்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் இந்த வசதியை பயன்படுத்தி தங்களது முழுமையான ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புகார்தாரர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பை உறுதிபடுத்தும் வகையில் அவர்களது அடையாளங்கள் ரகசியமாக பாதுகாக்கப்படும். புகார் அளித்ததற்காக எந்தவொரு புகார்தாரரும் எவ்வித துன்புறுத்தல், அச்சுறுத்தல் அல்லது பழிவாங்கும் நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படமாட்டார்கள் என்று புகார்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு 'உள்நாட்டு விஜிலென்ஸ் குழுக்கள்' உறுதியளிக்கிறது.

பெறப்படும் அனைத்து புகார்களும் நியாயமான, பாரபட்சமற்ற மற்றும் உரிய காலக்கெடுவுக்குள் விசாரிக்கப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கிறேன்.

'உள்நாட்டு விஜிலென்ஸ் குழுக்களின்' செயல்பாடுகள் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகள், சரக டி.ஐ.ஜி.க்கள், மண்டல ஐ.ஜி.க்கள் மற்றும் மாநகர போலீஸ் கமிஷனர்கள், கூடுதல் டி.ஜி.பி.க்கள் ஆகியோரால் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

என்னுடைய நேரடி கண்காணிப்பும் இந்த குழுக்கள் மீது இருக்கும். பொதுமக்கள் எவ்வித அச்சமும் இல்லாமல் புகார்களை தெரிவிக்கலாம்.

செல்போன் எண்கள்

செல்போன் மற்றும் வாட்ஸ்அப் எண்கள் விவரம் வருமாறு:–

1. சென்னை கமிஷனரகம் – 7871723000
2. தாம்பரம் கமிஷனரகம் – 6374514428
3. ஆவடி கமிஷனரகம் – 9840018110
4. காஞ்சிபுரம் மாவட்டம் – 9940031700
5. செங்கல்பட்டு – 9500779100
6. திருவள்ளூர் – 9498181359

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இலங்கை அகதிகள் தாயகம் திரும்ப சிறப்பு ஏற்பாடு!



கொழும்பு, ஆக. 20–

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் தாயகம் திரும்ப சிறப்பு ஏற்பாடு செய்யப்படும் என மந்திரி உறுதியளித்து உள்ளார்.

இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை அகதிகள் மீண்டும் சொந்த நாடு திரும்புவதற்கு வசதியாக, குடியுரிமை நடைமுறைகளை எளிமையாக்குவது தொடர்பாக இலங்கை அரசு நாடாளுமன்றத்தில் சமீபத்தில் அறிவித்திருந்தது. இந்நிலையில் இதுதொடர்பாக பொதுப்பாதுகாப்பு துறை மந்திரி ஆனந்த விஜேபால கூறுகையில், முறையாக ஆவணங்கள் இன்றி வெளியேறிய அகதிகள், சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை அணுகி பாதுகாப்பு அனுமதி பெற வேண்டும் என்றார்.

2002–ம் ஆண்டு முதல் 2022–ம் ஆண்டு வரை 18 ஆயிரம் அகதிகள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு திரும்பினர். எனினும், 1983–க்கு பின் சுமார் 90 ஆயிரம் அகதிகள் இந்தியாவில் வசித்து வருகின்றனர். இந்த சூழலில், ஆகஸ்டு 1, 2006–க்கு முன் வெளியேறியவர்கள், கொலை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் இன்றி இருந்தால், தற்காலிக பாஸ்போர்ட்டு மூலம் தாயகம் திரும்ப அனுமதிக்கப்படுவர். அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாது என்றும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கு எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பு அளிப்பதாக உறுதி அளித்துள்ளன. இதற்கேற்ப அகதிகளுக்கு, அவர்கள் இலங்கை திரும்புவதற்கு தேவையான ஆவணங்களை அனுப்பி அரசு ஆதரவு அளிக்கும் என விஜேபால கூறியுள்ளார். இதன்படி, பாதுகாப்பு சோதனைகளை முடித்த பின்னர் தகுதி வாய்ந்த அகதிகள் சொந்த நாட்டுக்கு திருப்பி அழைத்து செல்ல சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன. இலங்கை குடியுரிமை சட்டத்தின் கீழ், தற்காலிக பாஸ்போர்ட்டை பயன்படுத்தி, நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட விமான நிலையம் அல்லது துறைமுகத்திற்கு வர அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

# மணிப்பூரில் மீண்டும் பதற்றம்!



இம்பால், ஆக. 20–

மாநிலத்தில் நிலவும் சட்டம்–ஒழுங்கு சூழலைக் கருத்தில் கொண்டு, (ஆகஸ்ட் 20ம் தேதி) முதல் மூன்று நாட்களுக்கு அனைத்து கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டிருக்கும் என்று மணிப்பூர் அரசு அறிவித்துள்ளது.

மாநிலத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிக்கு முன்னதாக 'தேசிய குடிமக்கள் பதிவேட்டை' (NRC) புதுப்பிக்க வலியுறுத்தி, 'நியாயமான தொகுதி மறுவரையறைக்கான இயக்கம்' (JFD) அழைப்பு விடுத்திருந்த 48 மணி நேர பொது வேலைநிறுத்தத்தின் இரண்டாவது நாளில், மணிப்பூரின் குறிப்பிட்ட மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில் போராட்டக்காரர்கள் அரசியல்வாதிகளின் உருவ பொம்மைகளை எரித்தும் பேரணிகளை நடத்தியும் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

தங்கள் தொடர் போராட்டத்தின் ஒரு பகுதியாக, முதல் அனைத்து அரசு அலுவலகங்களையும் புறக்கணிக்கப்போவதாகவும் ஜே.எப்.டி (JFD) அறிவித்துள்ளது.

இந்நிலையில் மாநிலக் கல்வித் துறை பிறப்பித்த உத்தரவில், "மாநிலத்தில் நிலவும் சட்டம்–ஒழுங்கு சூழலைக் கருத்தில் கொண்டு, அரசு, அரசு உதவி பெறும் அல்லது உதவி பெறாத துறைகளின் கீழ் இயங்கும் அனைத்துப் பள்ளிகள் (அதாவது இடைநிலைக் கல்வி வாரியம், மேல்நிலைக் கல்வி கவுன்சில், மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் அல்லது பிற வாரியங்களுடன் இணைக்கப்பட்டவை) மற்றும் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை ஆகஸ்ட் 20 முதல் ஆகஸ்ட் 22ம் தேதி வரை மூடுமாறு மணிப்பூர் கவர்னர் உத்தரவிட்டுள்ளார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்பால் மேற்கு, இம்பால் கிழக்கு, பிஷ்ணுபூர் மற்றும் தௌபால் மாவட்டங்களில் பல இடங்களில் சாலை மறியல் போராட்டங்கள் தொடர்ந்தன. பந்த் ஆதரவாளர்கள் தனியார் வாகனங்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் வாகனங்களை வழிமறித்து, அவற்றை முன்னேறிச் செல்ல விடாமல் திருப்பிப்போகுமாறு வலியுறுத்தினர்.



# ரக்ஷா பந்தன்: ராசிக்கேற்ற பரிசுகள்!



சகோதரர்–சகோதரி உறவை வலுப்படுத்தும் முக்கிய பண்டிகையான ரக்ஷா பந்தன், ஆவணி பௌர்ணமி நாளில் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு ஆகஸ்ட் 28ஆம் தேதி ரக்ஷா பந்தன் கொண்டாடப்படுகிறது. ஜோதிட நம்பிக்கைகளின்படி, சகோதரியின் ராசிக்கு ஏற்ற நிறம் அல்லது பொருளை பரிசாக வழங்குவது உறவில் அன்பையும் நல்லிணக்கத்தையும் அதிகரிக்கும் எனக் கூறப்படுகிறது.

மேஷம்: சிவப்பு நிற ஆடைகள் வழங்கலாம்.

ரிஷபம்: வெள்ளி ஆபரணங்கள் பரிசளிக்கலாம்.

மிதுனம்: பச்சை நிற வளையல்கள் அல்லது ஆடைகள் ஏற்றவை.

கடகம்: வெள்ளிப் பொருட்களை வழங்கலாம்.

சிம்மம்: தங்க ஆபரணம் அல்லது மஞ்சள் நிறப் பொருட்கள் சிறப்பு.

கன்னி: பச்சை நிறப் பொருட்கள் வழங்கலாம்.

துலாம்: வெள்ளி ஆபரணம், கைப்பை அல்லது ஆடைகள் வழங்கலாம்.

விருச்சிகம்: சிவப்பு நிறப் பொருட்கள் நன்மை தரும்.

தனுசு: தங்க ஆபரணம் அல்லது மஞ்சள் நிற ஆடைகள் வழங்கலாம்.

மகரம்: பர்பிள் நிறப் பொருட்களை பரிசளிக்கலாம்.

கும்பம்: நீல நிற ஆடைகள், கருப்பு திராட்சை, பேரீச்சம்பழம் வழங்கலாம்.

மீனம்: கலைநயமிக்க பித்தளைப் பொருட்கள் அல்லது மஞ்சள் நிற ஆடைகள் வழங்கலாம்.

ராசிக்கு ஏற்ற பரிசுகளை வழங்குவது சகோதரசகோதரி உறவில் அன்பு, பாசம், இணக்கம் அதிகரிக்க உதவும் என்பது ஜோதிட நம்பிக்கை.

குறிப்பு: இத்தகவல்கள் ஜோதிடம் மற்றும் ஆன்மீக நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை; அறிவியல் ஆதாரங்கள் இல்லை.

# ஓணம் போனசாக ரூ.1.05 லட்சம்.. கேரளத்தில் அரசு மதுபான ஊழியர்களுக்கு அதிரடி சலுகை..!




திருவனந்தபுரம், ஆக. 20–

கேரள மாநில மதுபானக் கழக (BEVCO) ஊழியர்களுக்கான ஓணம் போனஸ் அறிவிக்கப்பட்டுள்ளது; இந்த ஆண்டும் போனஸ் தொகை ரூ.1 லட்சத்தைத் தாண்டியுள்ளது

கேரளத்தில் உள்ள அரசு பொதுத்துறை நிறுவனங்களில், ஊழியர்களுக்கு அதிக போனஸ் வழங்கும் நிறுவனமாக கேரள மதுபான கழகம் உருவெடுத்துள்ளது.

கடந்த ஆண்டு ஓணம் பண்டிகையை முன்னிட்டு அரசு மதுபான கழகம் ஊழியர்களுக்கு போனசாக ரூ.1 லட்சம் வழங்கியது. இந்த நிலையில் இந்த ஆண்டும் அதிரடி சலுகையை அறிவித்துள்ளது. அதாவது ரூ.1.05 லட்சம் போனஸ் வழங்க அதன் நிர்வாக இயக்குனர் யோகேஷ் குப்தா அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், ஓணம் முன் பணமாக ரூ.50 ஆயிரம் ஊழியர்களுக்கு வழங்கப்படும். இது ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து 7 தவணைகளாக பிடித்தம் செய்யப்படும். தற்காலிக பணியாளர்களுக்கு ரூ.6,500 ஊக்கத் தொகை, தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் மூலம் பணியமர்த்தப்பட்ட பாதுகாவலர்களுக்கு ரூ.13 ஆயிரம் வழங்கப்படும் என்றார்.

# அதிரடியாக உயர்ந்த தங்கம், வெள்ளி விலை!



சென்னை, ஆக. 20–

சென்னையில் இன்று தங்கம் அதிரடியாக உயர்ந்துள்ளது. அதன்படி, கிராமுக்கு 200 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,600–க்கும் சவரனுக்கு 1,600 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 16 ஆயிரத்து 800–க்கு விற்பனையாகிறது.

தங்கத்தை போலவே வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு 10 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் 260 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## ஆண்களே கவனம்! சிறுநீர் மாற்றங்களை அலட்சியப்படுத்தாதீர்கள்!



வயது அதிகரிக்கும்போது சிறுநீர் கழிப்பதில் ஏற்படும் மாற்றங்களை பலரும் இயல்பான வயது முதிர்வின் அறிகுறி என அலட்சியப்படுத்துகின்றனர். ஆனால், தொடர்ந்து அல்லது புதிதாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம்.

அடிக்கடி சிறுநீர் கழித்தல், இரவில் பலமுறை எழுதல், சிறுநீர் ஓட்டம் குறைதல், சிறுநீர் கழிக்கத் தொடங்க சிரமம், சிறுநீர்ப்பை முழுமையாக காலியாகாத உணர்வு போன்றவை புரோஸ்டேட் சுரப்பி பெரிதாதல் (BPH) உள்ளிட்ட பல காரணங்களால் ஏற்படலாம். இவை மட்டும் புற்றுநோயை உறுதி செய்யாது.

புரோஸ்டேட் புற்றுநோய் ஆரம்பத்தில் அறிகுறிகள் இல்லாமலும் இருக்கலாம். நோய் முன்னேறும்போது சிறுநீர் அல்லது விந்துவில் ரத்தம், கீழ் முதுகு அல்லது இடுப்புப் பகுதியில் தொடர்ந்து வலி போன்ற அறிகுறிகள் தோன்றலாம்.

வயது மற்றும் குடும்ப வரலாறும் முக்கியம். தந்தை அல்லது சகோதரருக்கு புரோஸ்டேட் புற்றுநோய் இருந்திருந்தால் ஆபத்து அதிகரிக்கலாம்.

PSA ரத்தப் பரிசோதனை உதவிகரமாக இருந்தாலும், PSA அதிகமாக இருப்பது மட்டும் புற்றுநோயை உறுதி செய்யாது.

சிறுநீர் பழக்கத்தில் தொடர்ந்து மாற்றம், ரத்தம், அதிக சிரமம் அல்லது காரணமற்ற உடல் எடை குறைதல் இருந்தால் மருத்துவரை அணுகுவது அவசியம்.

## சினிமா துளிகள்..!

### பழம்பெரும் நடிகை சௌகார் ஜானகி மருத்துவமனையில் அனுமதி...!



பழம்பெரும் நடிகை சௌகார் ஜானகி உடல்நலக்குறைவு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை பிரிவில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கன்னட மொழி பேசும் குடும்பத்தில் டிசம்பர் 12, 1931–ஆம் ஆண்டு பிறந்த சௌகார் ஜானகி தெலுங்கு, தமிழ், மலையாளம் மற்றும் கன்னடா உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளில் 450–க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். இதுதவிர 300–க்கும் மேற்பட்ட மேடை நாடகங்களில் நடித்துள்ளார்.

நடிகை சௌகார் ஜானகி 1959–ஆம் ஆண்டு வெளியான கன்னடா மொழியில் முதல் பான் இந்தியா திரைப்படமான மகிஷாசுர மர்தினியில் நடித்துள்ளார். இந்தப் படத்தில் சௌகார் ஜானகி டாக்டர் ராஜ்குமாருடன் நடித்தார். அந்த வகையில், சௌகார் ஜானகி புகழ்பெற்ற பான் இந்தியா நடிகை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தெலுங்கு மொழியில் எடுக்கப்பட்ட ஷவுகாரு என்ற திரைப்படத்தில் தான் நடிகை சௌகார் ஜானகி முதன் முதலில் நடித்தார். இந்தப் படத்தை இயக்குநர் எல்.வி. பிரசாத் இயக்கியுள்ளார். இந்த திரைப்படத்தை தொடர்ந்து தான் இவருக்கு சௌகார் என்ற புனை பெயர் வந்தது. இவர் 1952–ஆம் ஆண்டு வெளியான வளையாபதி என்ற திரைப்படத்தின் மூலம் தான் தமிழ் திரையுலகில் அறிமுகமானார். இதைத் தொடர்ந்து இவர் எண்ணற்ற தமிழ் திரைப்படங்களில் நடித்து புகழ் பெற்றார். தமிழ் மட்டுமின்றி தெலுங்கு மொழியிலும் இவர் நடித்த திரைப்படங்கள் மாபெரும் வெற்றி பெற்றதோடு, இவருக்கென தனி ரசிகர் பட்டாளத்தை பெற்றுக்கொடுத்தது.

### இந்திய சினிமாவிலேயே முதல்முறை?.. 12,000 திரைகளில் வெளியாகும் 'டாக்ஸிக்'!



'டாக்ஸிக்' திரைப்படம் உலகம் முழுவதும் சுமார் 12,000 திரைகளில் வெளியாக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்திய சினிமா வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய திரை வெளியீடாக இப்படத்தை கொண்டு செல்ல படக்குழு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், 'டாக்ஸிக்' படத்திற்கான முன்பதிவு ஆகஸ்ட் 21–ம் தேதி தொடங்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. யாஷ்ஷின் பான் இந்தியா மார்க்கெட்டுக்கு இந்த பிரம்மாண்டமான வெளியீடு மேலும் வலு சேர்க்குமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

# முதல்-அமைச்சர் விஜய் வெளியிட்ட முக்கிய அறிவிப்புகள்: ஒவ்வொரு எம்.எல்.ஏ.விற்கும் மாதம் இனி எவ்வளவு தொகை கிடைக்கும்..?



சென்னை, ஆக. 20–

மக்கள் பணியை தடையின்றி செய்திட ஏதுவாக அனைத்து எம்எல்ஏக்களுக்கும் அரசு சார்பில் வாகனம் வழங்கப்படும். வாகனத்துக்கு எரிபொருள், ஓட்டுநர் உள்ளிட்ட பராமரிப்புச் செலவுகளுக்காக மாதந்தோறும் ரூ.75 ஆயிரம் வழங்கப்படும் என்று முதல்–அமைச்சர் விஜய் தெரிவித்தார்.

**110 விதியின் கீழ் அறிவிப்பு**

தமிழக சட்டசபை நேற்று தொடங்கியதும், பேரவை விதி 110–ன் கீழ் முதல்–அமைச்சர் சில அறிவிப்புகளை செய்ய இருப்பதாக சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் அறிவித்தார்.

இதையடுத்து முதல்–அமைச்சர் விஜய் எழுந்து, 110 விதியின் கீழ் 3 அறிவிப்புகளை அடுத்தடுத்து வெளியிட்டார். இதுதொடர்பாக அவர் கூறுகையில், "கடந்த 12–ந்தேதியன்று காட்டுமன்னார்கோவில் எம்.எல்.ஏ. ஜோதிமணி பேசும் போது, எந்தவொரு பொருளாதார பலம் இல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்களாக பணியாற்றிகொண்டிருப்பவர்கள் தங்களின் தொகுதிப்பணிகளை செய்ய சொந்த வாகனங்களோ அல்லது உதவியாளர்களையோ வைத்துக்கொள்ள முடிவதில்லை என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றில், எளிய பின்னணியில் இருந்து பணபலமோ, அரசியல் பின்னணியோ இன்றி மக்களின் பேராதரவோடு முதன்முறையாக சட்டமன்றத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள முதல் தலைமுறை சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைக் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

**அரசு சார்பில் வாகனம்**

தங்களது தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டறியவும், அரசுத் திட்டங்கள் மக்களை சென்றடைவதை கண்காணிக்கவும், தங்களின் தொகுதி முழுவதும் தொடர் பயணங்களை சட்டமன்ற உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டியுள் ளது.

பொருளாதார பலமில்லாமல் சட்டமன்ற உறுப்பினர்களாக பணியாற்றும் மற்றும் முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தங்களது மக்கள் பணியை தொய்வின்றி தொடருவதற்கு வசதியாக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அரசு சார்பில் வாகனம் வழங்கப்படும்.

**குறைகளுக்கு தீர்வு காண வழிவகுக்கும்**

இந்த அறிவிப்பு, சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களின் பயணத்தேவைகளுக்காக பிறரை சார்ந்து இருப்பதை தடுத்து, அவர்கள் எவ்வித சமரசமும் இன்றி சுதந்திரமாகவும், நேர்மையாகவும் தங்களின் தொகுதிக்குட்பட்ட கிராமப்புற மற்றும் தொலைதூரப்பகுதிகளுக்கு எளிதாக பயணம் செய்து, தொகுதி முழு வதும் உள்ள மக்களை நேரடியாக சந்தித்து அவர்களின் குறைகளுக்கு தீர்வு காண வழிவகுக்கும்.

அதோடு மட்டுமின்றி, சட்டமன்ற உறுப்பினர்களின் பொருளாதார சுமையை குறைத்து, கடைகோடி மக்களுக்கு லஞ்ச லாவண்யமற்ற, நேர்மையான மற்றும் வெளிப்படையான நிர்வாகத்தை அளிக்கவும் உதவும்.

வாகனப்படியாக ரூ.75 ஆயிரம்

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு வழங்கும் வாகனத்தை பராமரிக்கும் விதமாக, வாகனத்துக்கு டிரைவர், எரிபொருள், வாகன பராமரிப்பு உள்ளிட்ட செலவினங்களுக்காக மாதந்தோறும் ரூ.75 ஆயிரம் வாகனப்படியாகவும், அலுவலகப்பணிகளில் உதவி செய்ய ஒரு உதவியாளரை நியமித்துக்கொள்ள மாதந்தோறும் ரூ.25 ஆயிரம் உதவியாளர் படியாகவும் வழங்கப்படும். இதற்காக உரிய சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொண்டு ஆணைகள் வெளியிடப்படும்" என்று முதல்–அமைச்சர் விஜய் தெரிவித்தார்.

இந்நிலையில் முதல்–அமைச்சர் விஜய் வெளியிட்ட அறிவிப்பால், எம்.எல்.ஏ.,க்களுக்கு மாதந்தோறும் 2.05 லட்சம் ரூபாய் கிடைக்க உள்ளது.

தமிழகத்தில் 234 எம்.எல்.ஏ.,க்கள் உள்ளனர். முதல்–அமைச்சர், அமைச்சர்கள் மற்றும் சபாநாயகருக்கு, அரசு சார்பில், 'இன்னோவா' கார் வழங்கப்பட்டு உள்ளது. இவர்களை தவிர்த்து, 199 எம்.எல்.ஏ.,க்கள் உள்ளனர். இவர்களுக்கு கார் வாங்க தலா, 15 லட்சம் ரூபாய் வரை அரசு ஒதுக்கவுள்ளது.

இதனால், 30 கோடி ரூபாய் வரை செலவாகும். எரிபொருள், உதவியாளர் சம்பளம், டிரைவர் சம்பளம், பராமரிப்பு செலவு என, 199 பேருக்கு மாதம் 2 கோடி ரூபாய் வரை செலவிடப்பட உள்ளது. இதனால், ஆண்டுக்கு 24 கோடி ரூபாய் செலவாகும்.

தற்போது, எம்.எல்.ஏ.,க்களுக்கு அடிப்படை ஊதியம்: ரூ.30 ஆயிரம்

மாதாந்திர ஈட்டுப்படி ரூ.10,000

தொகுதிப்படி ரூ.25,000

அஞ்சல் படி ரூ.2500

தொலைபேசிப்படி ரூ.7500

தொகுப்புப்படி ரூ.5000

வாகனப்படி ரூ.25,000 என மொத்தம் 1,05,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

இது தவிர, மருத்துவச் செலவிற்கு மாதம் 5,000 ரூபாய்; சட்டசபை நடக்கும் நாட்களில் தனியாக படி; மாலை நேரங்களில் நடக்கும் சட்டசபை கூட்டத்திற்கு கூடுதல் படி என வழங்கப்படுகிறது. மேலும், சட்டசபை கேன்டீனில் சைவ, அசைவ உணவுகள், டீ, காபி, சிற்றுண்டி ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. சென்னையில் உள்ள எம்.எல்.ஏ., விடுதி யில் இருந்து சட்டசபைக்கு வர, இலவச 'ஏசி' பஸ்களும் இயக்கப்படுகின்றன.

தற்போது டிரைவர், உதவியாளர், எரிபொருள் செலவு என கூடுதலாக 1 லட்சம் ரூபாய் வழங்கப்பட உள்ளது. இதனால்,ஒரு எம்.எல்.ஏ., வுக்கு மாதம் 2.05 லட்சம் ரூபாய் வரை கிடைக்கும்.

அதே நேரத்தில், ஏற்கனவே உள்ள ஊதியத்தில் வாகனப்படியாக 25,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அந்த பணம் தொடர்ந்து வழங்கப்படுமா என்பதை நிதித்துறை முடிவு செய்யும் என்று கூறப்படுகிறது.

# மோட்டார் வாகன ஆய்வாளர் பணி - நேர்முகத்தேர்வு எப்போது?




சென்னை, ஆக. 20–

தடை தற்போது நீங்கியுள்ள நிலையில், நேர்முகத்தேர்வுக்கான தேதியை டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளர் பணிக்கு செப்டம்பர் 1 முதல் 3ஆம் தேதி வரை நேர்முகத் தேர்வு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன ஆய்வாளர் பதவியில் காலியாக உள்ள 110 பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை டி.என்.பி.எஸ்.சி கடந்த 2018–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளியிட்டது. இத்தேர்வுக்கு விண்ணப்பித்த 2,176 பேரில் 785 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு, தகுதியானவர்களுக்கு 2018 ஜூன் 10 அன்று எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது. விதிகளின்படி 1:2 என்ற விகிதத்தில் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட வேண்டும். ஆனால், சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்காமல் வெறும் 33 பேர் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதனை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டிலும் பிறகு சுப்ரீம் கோர்ட்டிலும் வழக்குகள் தொடரப்பட்டது. இதனால் நியமன நடைமுறைகளில் சுமார் 8 ஆண்டுகள் தடை நீடித்தது. இந்த தடை தற்போது நீங்கியுள்ள நிலையில், நேர்முகத்தேர்வுக்கான தேதியை டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளர் பணிக்கு செப்டம்பர் 1 முதல் 3ஆம் தேதி வரை நேர்முகத் தேர்வு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வில் பங்கேற்க தகுதி வாய்ந்தவர்களின் பட்டியலும் டிஎன்பிஎஸ்சி இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

# அரசு பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத உள் ஒதுக்கீடு: 614 பேருக்கு மருத்துவ இடங்கள்!



சென்னை, ஆக. 20–

தமிழகத்தில் எம்.பி.பி. எஸ்., பி.டி. எஸ்., மருத்துவ படிப்புக்கான மாணவ சேர்க்கை கலந்தாய்வு நடந்து வருகிறது. அரசு பள்ளி மாணவர்களுக்கான, 7.5 சதவீத உள்ஒதுக்கீட்டில், 614 மாணவ மாணவியருக்கு, மருத்துவ படிப்பு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து, பள்ளிக்கல்வித்துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:– படிப்புக்கான மருத்துவ கலந்தாய்வில், 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டில், 510 மாணவர்களுக்கு எம்.பி.பி.எஸ். இடம், 104 மாணவர்களுக்கு பி.டி. எஸ்., இடம் என, மொத்தம் 614 இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

எம்.பி.பி.எஸ்., படிப்பை பொறுத்தவரை, 323 மாணவர்களுக்கு அரசு கல்லூரிகள், 12 பேருக்கு இ.எஸ்.ஐ., மருத்துவ கல்லூரிகள், 166 பேருக்கு தனியார் மருத்துவ கல்லூரிகள், 9 பேருக்கு நிகர் நிலை பல்கலையில் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பி.டி. எஸ்., பொறுத்தவரை படிப்பை 16 பேருக்கு அரசு கல்லூரிகளிலும் 88 பேருக்கு தனியார் மருத்துவ கல்லூரிகளிலும் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியாக பின்தங்கிய சிறந்த மாணவர்கள், மருத்துவ கல்வி பெறுவதற்கு, 7.5 சதவீத உள் ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு தரமான கல்வி வழிகாட்டுதல் மற்றும் போட்டித் தேர்வுக்கான பயிற்சி ஆகியவற்றை வழங்குவதன் வழியே, பள்ளிக்கல்வித்துறை அரசு பள்ளிகளை தொடர்ந்து வலுப்படுத்தும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்டம், அவிநாசி நகராட்சி, 33, வ.உ.சி.குடியிருப்பு, நேரு நகர் பகுதியில் வீடு வீடாக சென்று குப்பை சேகரிக்கும் பணிகளை பார்வையிட்டு பொதுமக்களுக்கு குப்பைகளை தரம் பிரித்து கொடுப்பது தொடர்பான விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள்.



மதுரை மாவட்டம், அருள்மிகு மீனாட்சி சுந்தரரேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு தொடர்பான முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, மாநகர காவல் ஆணையாளர் எஸ்.இராஜேந்திரன் ஆகியோர் ஆய்வு செய்து பார்வையிட்டார்கள். மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார் உடன் உள்ளார்.

# வேலை வாய்ப்பு

## மத்திய அரசில் 62 காலியிடங்கள்!

| விவரம் | தகவல் |
|---|---|
| நிறுவனத்தின் பெயர் | ASC Centre (South) |
| வேலை வகை | மத்திய அரசு வேலை |
| பணி தன்மை | நிரந்தரப் பணி |
| மொத்த காலியிடங்கள் | 62 |
| காலியிடங்கள் | MTS, Leading Fireman, Fireman, Fire Engine Driver, Tradesman Mate, Civilian Motor Driver (OG), Cleaner, Cook, Civilian Catering Instructor உள்ளிட்ட பணிகள் |
| பணியிடம் | இந்தியா முழுவதும் |
| விண்ணப்பம் தொடங்கும் தேதி: | 15.08.2026 |
| விண்ணப்பிக்க கடைசி தேதி: | 04.09.2026 |
| விண்ணப்பிக்கும் முறை : | தபால் மூலம் (Offline) |

அதிகாரப்பூர்வ இணையதளம் :

இந்திய ராணுவத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம்

விண்ணப்பப் படிவம்: கொடுக்கப்பட்டுள்ள Google Drive இணைப்பில் இருந்து விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து, அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் விண்ணப்பிக்கலாம்.

# "ABHAYA DAY - 2026" மருத்துவர்கள் பேரணி!




ஈரோடு, ஆக. 20–

ஈரோடு மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவர்கள் சங்கம் (EOGS) சார்பாக "ABHAYA DAY – 2026"

மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு எதிரான வன்முறையை கண்டித்தும், மருத்துவர்களின் பாதுகாப்பு மரியாதை கண்ணியம் ஆகியவற்றை வலியுறுத்தி நடைபெற்ற விழிப்புணர்வு பேரணிக்கு சங்கத்தின் தலைவர் டாக்டர் பூர்ணிமா சரவணன் தலைமை தாங்கினார். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக டாக்டர் அபுல் ஹாசன், டாக்டர் சி என் ராஜா, ஆகியோர் கலந்து கொண்டு பேரணியை துவக்கி வைத்து மருத்துவர்களுக்கு எதிரான வன்முறையை கண்டித்து கோஷம் எழுப்பினர். நிகழ்ச்சியில் மருத்துவர்கள் வாணி மாதவன், ஜி ஆர் தரணிப்பிரியா, ராஜலக்ஷ்மி, ரேவதி சதாசிவம், என் தரணி, கோகுல பிரியா, ஸ்ருதி ராஜேந்திரன், உள்ளிட்ட ஏராளமான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இந்த பேரணியில் கலந்து கொண்டனர்.

# சர்க்கரை விலை வரலாறு காணாத உயர்வு!



சென்னை, ஆக. 20–

இந்தியாவில் அத்தியாவசிய நுகர்வுப் பொருளான சர்க்கரையின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது. உத்தரப் பிரதேசத்தில் எம்–கிரேடு சர்க்கரை, ஆகஸ்ட் 18 நிலவரப்படி தொழிற்சாலை விலையில் குவிண்டாலுக்கு ரூ.5,400 ஆகவும், மொத்தச் சந்தையில் ரூ.5,800 வரையும் உயர்ந்துள்ளது. இதற்கு மேலும் 5% ஜி.எஸ்.டி. விதிக்கப்படுகிறது.

சர்க்கரை விலை மேலும் உயர வாய்ப்புள்ளதாக கூறப்படும் நிலையில், மத்திய அரசு உடனடியாக தலையிட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இந்த விலை உயர்வுக்கு எத்தனால் உற்பத்தி அதிகரிப்பே முக்கிய காரணமாக கூறப்படுகிறது. கரும்பு மற்றும் அதன் துணைப் பொருட்களில் கணிசமான அளவு எத்தனால் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படுவதால் சர்க்கரை உற்பத்தி குறைந்து, சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனிடையே, உள்நாட்டு தேவையை கருத்தில் கொண்டு சர்க்கரை ஏற்றுமதிக்கு மே 13 முதல் செப்டம்பர் 30, 2026 வரை மத்திய அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது.


விலை உயர்வை சாதகமாக பயன்படுத்தும் வகையில், சர்க்கரை ஆலைகள் தற்போது எத்தனால் உற்பத்தியிலிருந்து சர்க்கரை உற்பத்திக்கு கவனம் திருப்ப முடிவு செய்துள்ளன.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# தென் மாநில முதல்வர்கள் மாநாடு!

சென்னை, ஆக. 20–

சென்னையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் தென் மாநில முதல்வர்களின் மாநாடு தொடங்கி நடைபெற்று வருகின்றது.

சென்னையை அடுத்த கோவளத்தில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் நடைபெற்று வரும் தென்மண்டலக் குழுவின் 31–ஆவது கூட்டத்தில், தமிழ்நாடு முதல்வர் ஜோசப் விஜய், கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார், கேரள முதல்வர் வி.டி. சதீஷன், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு உள்ளிட்டோர் கலந்துகொண்டுள்ளனர்.

தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி வெளிநாடு சுற்றுப்பயணம் செல்லவுள்ளதால், அம்மாநிலம் சார்பில் துணை முதல்வர் பங்கேற்றுள்ளார்.

இந்த மாநாட்டை புதுச்சேரி முதல்வர் என். ரங்கசாமி புறக்கணித்திருக்கும் நிலையில், துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் கலந்துகொண்டுள்ளார்.

மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டம், 1956–இன் சட்டப் பிரிவுகள் 15 முதல் 22–இன் கீழ், தென்மண்டலக் குழு உள்பட ஐந்து மண்டலக் குழுக்கள்




அமைக்கப்பட்டன. இதில், தென்மண்டலக் குழுவின் தலைவராக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா செயல்படுகிறார். சுழற்சி அடிப்படையில், இந்த முறை தமிழ்நாடு முதல்வர் ச. ஜோசப் விஜய் இக்குழுவின் துணைத் தலைவராகப் பொறுப்பு வகிக்கிறார்.

இந்த மாநாட்டில், மாநிலங்களுக்கு இடையிலான எல்லைப் பிரச்னைகள், ஆந்திர பிரதேச மறுசீரமைப்புச் சட்டம் தொடர்புடைய விவகாரங்கள், நதிநீர்ப் பங்கீட்டுத் திட்டங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை விரைந்து விசாரிக்க அமைக்கப்பட்ட விரைவு நீதிமன்றங்கள், பெண்கள் பாதுகாப்பு, பாலியல் வன்கொடுமை வழக்குகளை விரைவாக புலனாய்வு செய்து குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருவது, பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதி திட்டம், விமானப் போக்குவரத்து மற்றும் கல்வி தொடர்பான பொதுவான மாநில விவகாரங்கள் குறித்து முக்கியமாக விவாதிக்கப்படவுள்ளன.

# ரேஷன் அரிசியை ஆட்டுக்கும், கோழிக்கும்தான் மக்கள் பயன்படுத்துகின்றனர்: அமைச்சர் செங்கோட்டையன் பேச்சால் சர்ச்சை!

சென்னை, ஆக. 20–

ரேஷன் அரிசியை ஆட்டுக்கும், கோழிக்கும்தான் மக்கள் பயன்படுத்துகின்றனர் என்ற அமைச்சர் செங்கோட்டையனின் பேச்சால் சர்ச்சை எழுந்தது.



தமிழக சட்டசபையில் காலை 9.30 மணிக்கு இன்றைய அலுவல்கள் தொடங்கின. கூட்டம் தொடங்கியதும், நேரமில்லா நேரம் எடுத்து கொள்ளப்பட்டது. கேள்வி நேரம் எடுத்து கொள்ளப்படவில்லை.

இதனை தொடர்ந்து, சவுதி அரேபியாவில் தமிழக மீனவர் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரத்தில் சட்டசபையில் அ.தி.மு.க. சார்பில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதனை தொடர்ந்து, எதிர்க்கட்சிகள் இதுதொடர்பாக அவையில் பேசினர்.

இன்றைய நிகழ்வில், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, கூட்டுறவு ஆகிய துறைகள் மீதான மானிய கோரிக்கைகள் விவாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. இதன்படி அது தொடர்பான விவாதத்தில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் வெங்கடரமணன் பேசினார்.

இதனை அடுத்து, தி.மு.க. எம்.எல்.ஏ. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேசும்போது, எங்களுடைய 5 ஆண்டுகளில் நெல் மூட்டைகள் நனையாமல் பாதுகாப்பாக குடோன்களில் வைத்தோம். நெல்லை பாதுகாத்தோம். நெல்லை நனையாமல், முளைக்க விடாமல், வெள்ளை நிறத்தில் அரிசி கிடைக்க வழி செய்தோம் என்றார்.

இதுபற்றி அமைச்சர் செங்கோட்டையன் பேசும்போது, ரேஷன் கடை அரிசியை ஆட்டுக்கும், கோழிக்கும்தான் மக்கள் பயன்படுத்தி கொண்டிருக்கின்றனர் என்பதே உண்மை என்றார். இதற்கு தி.மு.க. தரப்பில் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இதனை தொடர்ந்து, அமைச்சர் செங்கோட்டையன் பேசும்போது, நீங்கள் கூறினீர்கள். அதனால், கூறினேன். தமிழகத்தில் சன்ன ரக நெல் உற்பத்தி குறைவு. அண்டை மாநிலங்களில் இருந்து அவற்றை நாம் வாங்குகிறோம். தமிழகத்தில் சன்ன ரக நெல்லை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்காக, அதற்கான கூலியை முதல்–அமைச்சர் உயர்த்தி கொடுத்துள்ளார்.

தமிழகத்தில் இந்த ரக நெல் உற்பத்தி குறைவு. அதனை அதிகரிக்க முதல்–அமைச்சர் கூறியுள்ளார் என்றார். ரேஷன் கடை அரிசியை சிலர் பயன்படுத்துவதில்லை என்பதே உண்மை என கூறி முடித்து கொண்டார்.

# என்.எல்.சி. விவகாரம்: சட்டசபையில் காரசார விவாதம்!

சென்னை, ஆக. 20–

தமிழக சட்டசபையில் இன்றைய நிகழ்வின்போது நெய்வேலியில் உள்ள என்.எல்.சி. நிறுவனம் குறித்து காரசார விவாதம் நடைபெற்றது.

பாமக எம்.எல்.ஏ. சவுமியா அன்புமணி கூறியதாவது:–

தமிழ்நாட்டில் மனசாட்சியே இல்லாத நிறுவனம் என்றால் அது என்.எல்.சி நிறுவனம்தான். ஒரே இரவில் சி.எஸ்.ஆர்.–க்கு ஒரு சதவீதம் கொடுக்க வேண்டும்; அதை அந்த நிறுவனம் கொடுக்கிறதா? என்பதை பாருங்கள்... விளை நிலங்களை அழித்து, தண்ணீரையும் உறிஞ்சி எடுத்துவிட்டார்கள். ஆனால் அப்பகுதி மக்களுக்கு எதையும் செய்யவில்லை.



நிறுவனத்துக்காக நிலம் கொடுத்த மண்ணின்மைந்தர்களுக்கு நியாயமாக வேலை கொடுக்க வேண்டும். ஆனால் நுழைவுத்தேர்வு நடத்தி வேலைக்கு ஆட்கள் எடுக்கிறார்கள். நுழைவுத்தேர்வு நடத்த இது என்ன மருத்துவ படிப்பா?. என்.எல்.சி. நிறுவனம் கொடுக்கும் எந்த தகவலுமே உண்மைக்கு புறம்பான தகவலாக தான் இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கு தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா பதில் அளித்து கூறுகையில்,

என்.எல்.சி. நிர்வாகம் குறித்து நிறைய பேர் கோரிக்கை வைத்துள்ளனர். விவசாயிகளுக்கு பிரச்சினை என்றால் முதல்–அமைச்சர் விஜய் விவசாயிகள் பக்கம் தான் நிற்பார்கள். என்.எல்.சி. நிறுவனம் குறித்து சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் புகார்கள் தொடர்பாக விசாரிக்க உயர்மட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. அதற்கான தகவல்கள் உங்களுக்கு (சவுமியா அன்புமணி) வரும். யாருக்கும் எதிராக நாங்கள் கண்டிப்பாக நடந்து கொள்ளமாட்டோம். விவசாயிகளுக்கும், மக்களுக்கும் எப்போது உறுதுணையாக இருப்போம். என்.எல்.சி. நிர்வாகம் மீது தவறு இருந்தால் உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து தேமுதிக எம்.எல்.ஏ. பிரேமலதா விஜயகாந்த் பேசியதாவது:–


என்.எல்.சி. நிறுவனத்தால் விருத்தாசலத்தில் 20–க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கூட்டுக் குடிநீர் திட்டம் வேண்டும் என ஏற்கனவே சொல்லியிருக்கிறோம்; நீரில் கால்சியம் இருப்பதால் கிட்னி பாதிப்பு அதிகமாக இருக்கிறது.

அதுமட்டுமின்றி இதுவரை இழப்பீடு தொகை என்.எல்.சி. நிர்வாகத்தில் வழங்கப்படவில்லை. இன்றுவரை அப்பகுதி விவசாய மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். என்.எல்.சி. மூலம் எந்த தீர்வும் விருத்தாசலம் தொகுதி மக்களுக்கு கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை என்றார். இவ்வாறு என்.எல்.சி. விவகாரம் தொடர்பாக சட்டசபையில் காரசார விவாதம் நடந்தது.

# உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடியில் 1-ந் தேதி முதல் கட்டணம் உயர்வு!

கள்ளக்குறிச்சி, ஆக. 20–

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அடுத்த செங்குறிச்சியில் சுங்கச்சாவடி செயல்பட்டு வருகிறது. இந்த சுங்கச்சாவடியில் ஆண்டுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் சுங்கச்சாவடி கட்டணங்கள் உயர்த்தப்பட்டு வருகின்றன.




அந்த வகையில் செங்குறிச்சி சுங்கச்சாவடியில் வருகிற 1–ந் தேதி முதல் சுங்க கட்டணம் உயர்த்தப்படுவதாக உளுந்தூர்பேட்டை செங்குறிச்சி சுங்கச்சாவடி நிர்வாகம் இன்று காலை அறிவிப்பினை வெளி யிட்டுள்ளது. அதன்படி ரூ.5–ல் இருந்து ரூ.20 வரை கட்டணம் உயர்த்தப்படு வதாகவும் அறிவித்துள்ளது.

செங்குறிச்சி சுங்கச்சாவடியில் தற்போது பலமுறை பயணிக்கும் கார், ஜீப், வேன் உள்ளிட்ட வாகனங்களுக்கு ரூ.70 கட்டணம் வசூலிக்கப்படும் நிலையில் அதே கட்டணம் தொடரும் என்றும் தெரிவித்துள்ளது. மேலும் இலகு ரக வாகனங்களுக்கு தற்போது வசூலிக்கப்படும் கட்டணத்தில் இருந்து கூடுதலாக 5 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோன்று ஒருமுறை பயணிக்கும் லாரி, பஸ் உள்ளிட்ட வாகனங்களுக்கு தற்போது வசூலிக்கப்படும் கட்டணத்தில் இருந்து 10 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் ஒரே நாளில் பலமுறை பயணிக்கும் லாரி, பஸ்களுக்கு தற்போது வசூலிக்கப்படும் கட்டணத்தில் இருந்து 15 ரூபாய் உயர்த்தி வசூலிக்கப்பட உள்ளது.

தற்போது லாரிக்கு ரூ.380 சுங்க கட்டணமாக வசூலிக்கப்பட்டு வரும் நிலையில், ரூ.20 வரை உயர்த்தப்பட்டு ரூ.400 ஆக வசூலிக்கப்பட உள்ளது. பஸ்சுக்கு ரூ.240 வசூலிக்கப்பட்டு வரக்கூடிய நிலையில் ரூ.10 உயர்த்தப்பட்டு ரூ.250 ஆக வசூலிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று செங்குறிச்சி சுங்கச்சாவடி வழியாக வரும் மல்டி ஆக்சில் வாகனங்களுக்கு தற்போது வசூலிக்கப்படும் கட்டணத்தில் இருந்து 20 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. செங்குறிச்சி சுங்கச்சாவடியில் இந்த புதிய கட்டண உயர்வு முறையானது செப்டம்பர் 1–ந் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது. சுங்கச்சாவடி கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது வாகன ஓட்டிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# அமெரிக்காவில் விமானம் - காவல்துறை ஹெலிகாப்டர் மோதி விபத்து!!

அமெரிக்கா, ஆக. 20–

அமெரிக்காவில் சிறிய ரக விமானமும் காவல்துறையின் ஹெலிகாப்டரும் மோதி புதன்கிழமை மாலை விபத்துக்குள்ளானது.



பென்சில்வேனியா மாகாணம், கம்பர்லேண்ட் கவுண்டியில் உள்ள கார்லைல் விமான நிலையம் அருகே செஸ்னா 150 சிறிய ரக விமானமும், பென்சில்வேனியா மாகாண காவல்துறையின் பெல் 407 ஹெலிகாப்டரும் புதன்கிழமை இரவு 7:50 மணியளவில் (அமெரிக்க நேரப்படி) மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில், செஸ்னா 150 விமானத்தை இயக்கிய விமானி பலியானதாக அமெரிக்க காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த விமானத்தில் உயிரிழந்த விமானியைத் தவிர யாரும் பயணிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், ஹெலிகாப்டரில் பயணித்த பென்சில்வேனியா மாகாண காவல்துறையின் விமானப் பிரிவைச் சேர்ந்த இருவர் காயமடைந்திருப்பதாகவும், அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை இரவு 7 மணியளவில் பென்சில்வேனியா மாகாண காவல்துறையின் பெல் 407 ஹெலிகாப்டரில் வழக்கமான பயிற்சியில் விமானிகள் ஈடுபட்டிருந்தனர்.

அந்த சமயத்தில் கார்லைல் விமான நிலையத்திலிருந்து செஸ்னா ஜெட் விமானம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திடீரென்று புறப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், அந்த விமானம் வழக்கத்துக்கு மாறாக வலதுபுறம் திரும்பி, ஹெலிகாப்டரின் பின்புறத்தில் மோதியதால் விபத்து நேரிட்டதாக காவல்துறை தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் ஜெட் விமானம் பல துண்டுகளாக நொறுங்கி புல்வெளியில் விழுந்தது. இதில், விமானி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த விபத்து குறித்து அமெரிக்க விமான விபத்து விசாரணைப் பிரிவு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

# திருப்பதியில் அலைமோதும் பக்தர்கள் கூட்டம்!

திருப்பதி, ஆக. 20–

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் இந்த மாத தொடக்கத்தில் இருந்து தரிசனத்திற்கு பக்தர்கள் கூட்டம் குவிந்து வருகிறது. வைகுந்தம் அறைகள் அனைத்தும் பக்தர்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகிறது. தரிசன வரிசையில் இருந்து 3 கிலோமீட்டர் தூரம் உள்ள ஷீலா தோரணம் வரை பக்தர்கள் தரிசனத்திற்காக காத்திருக்கின்றனர்.



திருப்பதியில் நேற்று 76, 464 பேர் தரிசனம் செய்தனர். 36,913 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ.4.94 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது. 4.27 லட்சம் லட்டு விற்பனையானது. நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் 20 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்து வருகின்றனர். திருப்பதி மலையில் தற்போது கடும் வெயில் கொளுத்தி வருவதால், நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்கும் முதியவர்கள், பெண்கள் மற்றும் சிறு குழந்தைகள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

பக்தர்களின் சிரமத்தைக் குறைக்க, திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வரிசையில் காத்திருக்கும் பக்தர்களுக்கு தன்னார்வலர்கள் மூலமாக தொடர்ந்து குடிநீர், டீ, காபி, பால் மற்றும் அன்னப் பிரசாதங்கள் தடையின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

# அது என்ன வங்கி கேஒய்சி மோசடி? மக்களுக்கு ஆர்பிஐ விளக்கம்!!

புதுடெல்லி, ஆக. 20–

வங்கி கேஒய்சி மோசடி பற்றி கவனமாக இருங்கள், மோசடிகளில் இருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் என்று மத்திய ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியிருக்கிறது.




தற்போது வங்கிகளில், வாடிக்கையாளர்களின் விவரங்களை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருவதால், அது தொடர்பான மோசடிகளும் அதிகரித்து வருகிறது.

எனவே, இது குறித்து விழிப்புணர்வு செய்தியை ஆர்பிஐ வாட்ஸ்ஆப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் வாயிலாக மக்களுக்கு நேரடியாக அனுப்பி வருகிறது.

இன்று ஆர்பிஐ வெளியிட்டிருக்கும் செய்தியில், உங்கள் வாடிக்கையாளர் பற்றிய விவரங்களை (KYC) புதுப்பிக்கவும், இல்லையெனில் உங்கள் வங்கி கணக்கு முடக்கப்படும்'' என்ற செய்தி உங்களுக்கு வந்துள்ளதா?

பதற்றப்பட வேண்டாம் — இது ஒரு மோசடியாக இருக்கலாம்! எனவே கிளிக் செய்வதற்கு முன் சிந்தியுங்கள். மோசடியாளர்கள் போலியான அவசர நிலையை உருவாக்குகிறார்கள்.

இந்த 3 விதிகளை பின்பற்றி அவர்களை மிக எளிதாக தோற்கடியுங்கள்:

நிறுத்துங்கள்: அவசரப்பட்டு செயல்படாதீர்கள்!

சிந்தியுங்கள்: வங்கிகள்/NBFC–கள் உங்கள் வாடிக்கையாளர் ஆளரி விவரங்களை (KYC) புதுப்பிப்பதற்காக ஒருபோதும் இணைப்புகளை அனுப்புவதில்லை. செயல்படுங்கள்: இத்தகைய இணைப்புகளைக் கிளிக் செய்யாதீர்கள் அல்லது உங்கள் OTP, PIN மற்றும் கடவுச்சொற்களை பகிர வேண்டாம். உங்கள் வங்கி / NBFC–யிடம் நேரில் உறுதிப்படுத்துங்கள்.

தெரியாத இணைய இணைப்பு = தெரியாத ஆபத்து என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு: m.rbi.org.in/FinancialEducation இணையதளத்தைப் பாருங்கள் என்று ரிசர்வ் வங்கி (RBI) சொல்கிறது விவரமாக இருங்கள், விழிப்புடன் இருங்கள்!, கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை எளிதாக ஏமாந்துவிடாதீர்கள் என்று அறிவுறுத்தியிருக்கிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020